

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.வை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி சிறப்புரை ஆற்றினார். மேடையில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

குறிஞ்சிப்பாடி தொகுதி, நடுவீரப்பட்டு மந்தகரையில்

# தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் நாளை (20.04.2026-திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி தொகுதி நடுவீரப்பட்டு மந்தகரையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை, ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் வாக்கு கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார். அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் – கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

தென்காசி தொகுதி சுரண்டை மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை!

# தென்காசி கழக வேட்பாளர் மரு.கலை கதிரவனுக்கு ஆதரவு கோரி அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வாக்கு சேகரிப்பு!

## கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் - பழனிநாடார் எம்.எல்.ஏ.முன்னிலை!

தென்காசி.ஏப்.19

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சுரண்டை பொட்டல் மாடசாமி கோவில் தெருவில் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் மரு. கலை கதிரவனுக்கு வாக்கு சேகரிக்கும் நிகழ்வு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்ம நாதன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நகர பொறுப்பாளர் கணேசன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்பங்கேற்று தேர்தல் பிரச்சாரத்தின் போது சுரண்டை பொட்டல் மாடசாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பேசியதாவது.

இங்கு வேட்பாளராக நிற்கும் மருத்துவர் கலை கதிரவன்,தந்தை அன்பகம் கலை அவர்கள் கழகத் தலைவர் அவர்களுடன்

50 ஆண்டு காலம் நெருக்கமாக பழகி வருகிறவர் ஆவார்.உங்களுக்கு நல்ல வேட்பாளர் கிடைத்துள்ளார்.அவரை நீங்கள் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.நான் தொடர்ந்து திருச்செந்தூர் தொகுதியில் 6 முறை வெற்றி பெற்றுள்ளேன்.முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம். தற்போது தேர்தல் அறிக்கையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 2000 ம் ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும்,ரூபாய் 8000 மதிப்பில் இல்லத்தரசி கூப்பன் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

உங்கள் வேட்பாளர் கலை கதிரவன் மருத்துவர், நல்லவர், எல்லாரிடமும் அன்பாக பழகக் கூடியவர். இங்கே கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் நிற்பதாக நினைத்துக் கொண்டு நீங்கள் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் கலை கதிரவனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.இது சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது.முழு அளவிலான வாக்குகளை பதிவு செய்ய வேண்டும். ஆகவே நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து அமோகமான வெற்றியை பெற்றுத் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பேசினார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் அருள்,ஒன்றிய பொறுப்பாளர்கள் ரமேஷ்,வீராணம் சேக் முகம்மது,நகர பொறுப்பாளர் வைகை கணேசன்,நகர காங்கிரஸ் தலைவர் ஜெயபால் உட்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தென்காசி தொகுதி கழக வேட்பாளர் மரு. கலை கதிரவனை ஆதரித்து பாவூர்சத்திரம்,திப்பனம் பட்டி ஆகிய ஊர்களில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.அப்போது பொதுமக்கள் தங்கள் முழு ஆதரவை தெரிவித்தனர்.



திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் சு. சுப்பிரமணியன் நெல்லை டவுனில் வீடு,வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.நிகழ்வில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் மாமன்ற உறுப்பினர் உலகநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறனை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் தே.கல்லுப்பட்டி பகுதியில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடையே உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.



நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செட்டிகுளம் மேலராமன்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் எஸ். ஆஸ்டின் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மாநகர மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் வெற்றிவேல் மற்றும் கழக முன்னோடிகள் கூட்டணி கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.


# 13 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

மண்ணில்
13.12.1926



மனதில்
19.4.2013







## செ.குப்புசாமி Ex.M.P.,

தலைவர் – தொ.மு.ச.பேரவை

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த நாள் இன்று!
ஆனது ஆண்டு பதிமூன்று!

மக்கள் அரசின் மாண்பு –
ஜனநாயகத்தின் விடியல்
இவைகளின் முன்மாதிரி "திராவிட மாடல்" வரலாற்றில் –
தொழிற்சங்க விதைகளாய் வாழ்ந்த வேர்முகம்
**செ.குப்புசாமி** Ex.M.P.,
அவர்களின் – நினைவு நாளில்
என்றும் தளபதியாரின் கொள்கை அணிவகுப்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் தளபதி வழியில்

**ராஜா குப்புசாமி**
கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர்

**சுடர்மணி ராஜா** B.B.A., L.L.B.,